// தமிழ் வளர்ச்சிக் கழகம்

செய்தி மின்மடல்

தனிச் சுற்றுக்கு மட்டும் 1:5 அக்டோபர் 2025

# உங்களுடன்

வணக்கம்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்
அறங்காவல் குழுத் தலைவர்
மேனாள் ஒன்றிய அமைச்சர்
திரு ப. சிதம்பரம் அவர்கள்
ஆயிரம் பிறை கண்டிருக்கிறார்!
நீடு வாழ்ந்திடவும்
தமிழ் வளர்ச்சிக் கழகத்தை
வழிநடத்திச் செல்லவும்
வாழ்த்துவோம்!

தமிழுலகம்
வியந்து கொண்டாடிய
உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு
ஆய்வரங்கக் கட்டுரைகள்
10 தொகுதிகள்
10 ஆயிரம் பக்கங்கள்
விரைவில் தமிழ் வளர்ச்சிக் கழக
வலைத்தளத்தில்!
வலம்வரப் போகின்றன
இணைய உலகில்!

சொல்புதிது கூட்டத்திற்குப்
பெருகி வரும் ஆதரவைக் கண்டு
தாங்க முடியாதவர்களின்
பெருமூச்சுகளையும் எருவாக்கிக்கொண்டு
ஆக்கப் பணிகளில் வழக்கம் போலத்
தமிழ் வளர்ச்சிக் கழகம்!

பேராசிரியர் மு. இராமசாமி
நாடகவியல் களஞ்சியப் பணி அறிக்கையைக்
குறித்த காலத்தில் தந்து வியப்பை
அளித்திருக்கிறார்! பாராட்டுவோம்!

அடுத்த கட்டப் பணிகளுக்கு
நகர்ந்து கொண்டிருக்கிறது
தமிழியல் களஞ்சியம்.

சென்னைப் பல்கலைக்கழகத்
தமிழ்த்துறையும் தமிழ் வளர்ச்சிக் கழகமும்
விக்கிமூலம் வழி அளிக்கும்
இணையத் தமிழ்ப் பயிற்சி வகுப்புக்குப்
பணிகளைத் தொடங்கியிருக்கிறார்
பேராசிரியர் ய. மணிகண்டன்!



கட்டற்ற தமிழ் வளங்கள்,
கொள்கைகள் குறித்த அறிமுகமும்
விக்கிமூலம் திட்டம் அறிமுகமும்
தமிழ் நூல்கள் மெய்ப்புப் பார்த்தல் பயிற்சி
செயல்முறை விளக்கமும்
தொழில்நுட்ப நுணுக்கங்களுமாக
நீச்சல்காரனும் திரு அருண்குமாரும்
நவம்பர் 21 வெள்ளிக்கிழமை
பயிற்சி அளிக்க இருக்கிறார்கள்!

ஒரு நாள் பயிற்சி!
30 மாணவர்கள் உணவுச் செலவு
பயிற்சியாளர்கள் உட்பட
விக்கிமூலம் வழி ஏற்பாடு செய்திருக்கிறார்
நீச்சல்காரன்!

நேரடிப் பயிற்சி முடிந்த பிறகும்
இணையவழியில் ஐயம் களைந்து
மாணவர்களைப் பங்களிக்க
ஊக்கப்படுத்தும் வகுப்புகள்
தொடரவும் திட்டம் இருக்கிறது.

ஆட்சிக்குழு உறுப்பினர்
திரு இராசரெத்தினம் இ.ஆ.ப.(ஓய்வு)
அறிமுகப்படுத்திய அயலகத் தமிழர்
திரு கந்தசாமி மாணிக்கம்
தமிழ்வளர்ச்சிக் கழகப் பணிகளைப்
பாராட்டிப் புரவலர் ஆகும்
விருப்பத்தைத் தெரிவித்திருப்பது
பணிகளின் பயணத்திற்கு
நம்பிக்கை தருகிறது.
தொடர்வோம்...

அன்புடன்
ம.ரா.

# சொல் புதிது – 5

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் *சொல் புதிது* என்னும் திட்டத்தின் ஐந்தாவது கூட்டம்
தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 17.09.25 முற்பகல் நடைபெற்றது.
இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பெற்ற 54 சொற்கள் வருமாறு:

| வ.எண் | ஆங்கிலம் | தமிழ் | வ.எண் | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|---|---|
| 1 | ANPR camera | ஊர்தி எண் காணி | 28 | Grease | மசகு |
| 2 | Badge | அடையாள வில்லை | 29 | Dose | கண்டிப்பு |
| 3 | CCTV camera | கண்காணி | 30 | Timeline | கால வரிசை |
| 4 | DSLR camera | எதிரொளிப் படக்கருவி | 31 | First look | முதல் நோக்கு |
| 5 | Hawala | முறையிலாப் பரிமாற்றம் | 32 | Lyric video | பாடல்வரிக் காட்சி |
| 6 | Hot news | பரபரப்புச் செய்தி | 33 | First single | முதல் பாடல் |
| 7 | Infotainment | தகவல் போக்கு | 34 | Gated community | காப்புக் குடியிருப்பு |
| 8 | Life style | வாழ்முறை | 35 | Academy | கலைக்கழகம் |
| 9 | Sport | தனி விளையாட்டு | 36 | Cartoon | கருத்துப்படம் |
| 10 | Game | விளையாட்டு/ஆட்டம் | 37 | Hydro carbon | ஆழ்நிலை நீர்மக் கரிமம் |
| 11 | Match | போட்டி விளையாட்டு | 38 | Screen shot | திரைப் பதிவுப் படி |
| 12 | Tournament | காலநிலை விளையாட்டு | 39 | Bumper prize | மாபெரும் பரிசு |
| 13 | Winner | வெற்றியாளர் | 40 | CAPTCHA | ஆளறி குறி |
| 14 | Runner | வெற்றி அண்மையர் | 41 | Showcase | காட்சிப் பேழை |
| 15 | Champion | வாகையர் | 42 | Biomining | நுண்ணுயிரி அகழ்வு |
| 16 | Championship | வாகைநிலை | 43 | Metacognition | மீ அறிதிறன் |
| 17 | Client | பயனி | 44 | QR code | விரைவு வினைக்குறி |
| 18 | Customer | வாடிக்கையாளர் | 45 | Hologram | முப்பரிமாண ஒளிப் படம் |
| 19 | Biopic | வாழ்க்கைப் படம் | 46 | Bonhomie | நற்பண்பு |
| 20 | Caravan vehicle | வசதி நிறை வண்டி | 47 | Omelette | முட்டை அடை |
| 21 | Bonanza | அதிரடிப் பயன் | 48 | Half boiled egg | முட்டை அப்பம் |
| 22 | Trendy | புதுப்போக்கு | 49 | Fried rice | பொரிசோறு |
| 23 | Trendsetter | புதுப்போக்கு ஆக்குநர் | 50 | Heartin Idly | இதய வடிவ இட்லி |
| 24 | Chip | சில்லு | 51 | Tetra pack | நாலடுக்குப் பொதி/ நாலடுக்குக் கட்டகம் |
| 25 | Remake | மறு ஆக்கம் | 52 | Risk | இடர் |
| 26 | Rubber stamp | ஒப்ப முத்திரை | 53 | Rusk | உலர் ரொட்டி |
| 27 | Real estate | நில வணிகம் | 54 | Chain smoker | தொடர் புகையர் |

# பதினெண் கீழ்க்கணக்கு:
## பொருட்களஞ்சியம்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் கருத்தியலையும் பொருண்மைக் கூறுகளையும் பொதுமக்களும் அறியும் வண்ணம் பொருட்களஞ்சியம் உருவாக்குவது இன்றியமையாத தமிழ்ப் பணியாகும். இப் பதினெண் கீழ்க்கணக்குள் அறப் பொருண்மையில் அமைந்தவை 11; அகப் பொருண்மையில் அமைந்தவை 6; புறப் பொருண்மையில் அமைந்தவை 1.

இதுகாறும் பதினெண் கீழ்க்கணக்கு இலக்கியங்கட்குப் பொருட்களஞ்சியம் உருவாக்கப்படாத நிலையில் இத்திட்டம் ஒரு முதல் முயற்சி, முன்னோடி முயற்சி ஆகும்.

இத்திட்டத்தின் முதன்மையான நோக்கங்கள் வருமாறு:

- பதினெண் கீழ்க்கணக்கு இலக்கியங்கட்கான பொருண்மை நோக்குநூலாக அனைவருக்கும் பயன்படுதல்.
- அறம், அகம், புறம் சார்ந்த படைப்புகளின் இலக்கிய மரபினை அறிய உதவுதல்.
- சங்க மருவிய காலத்துப் பண்பாட்டினை அறியத் துணை நிற்றல்.
- பதினெண் கீழ்க்கணக்கு இலக்கியங்கட்குள்ளேயே பொருண்மையில் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளைத் தெளியத் துணைபுரிதல்.
- அக்காலத்து வாழ்க்கை முறை, கல்வி முறை, சமுதாய நிலை முதலியவை சார்ந்த ஆய்வுகட்கு வழிவகுத்தல்.

புதுச்சேரியிலுள்ள பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் ஆ. மணி அவர்களின் பொறுப்பில் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.



இப்பொருட்களஞ்சியத்தின் மாதிரிப் பதிவுகள் வருமாறு:

**அக்காரம் (5)** - வெல்லம் / சர்க்கரை. கரும்பினைக் காய்ச்சி எடுக்கும் இனிப்பான பொருள். யார் உண்டாலும் அக்காரம் கசப்புச் சுவையுடையது ஆகாது. இனிக்கவே செய்யும் (நாலடி. 112: 2: 4). பொன்னால் செய்த பாத்திரத்தில் புலியின் நகம் போன்ற வெண்மையான சோற்றை அக்காரம், பால் ஆகியவற்றோடு கலந்து கொடுத்தாலும் அன்பில்லாதவர் கைகளில் இருந்து பெற்று உண்பதைக் காட்டிலும், உப்பில்லாமல் வெந்த புல்லரிசி உணவை உயிர் போலும் அன்புடைய உறவினர் மாட்டு எந்தப் பாத்திரத்திலும் பெற்று உண்பது இனிதாகும் (நாலடி. 216: 2: 1). செக்கு ஆட்டும் தொழில் உடையவர்களும் செல்வம் உடையவர்களாக இருந்தால், பொதுமகளிர்க்கு அவர்கள் சர்க்கரை போன்று இனிப்பானவர்களே ஆவர் (நாலடி. 374: 4: 1). அக்காரத்தோடு சேர்ந்த மணலைத் தின்னலாமோ? கூடாது. அதுபோலப் பெரியாரோடு சேர்ந்திருந்தாலும் சிறியாரை நீக்கிப் பழக வேண்டும் (பழ. 18: 4: 1). அறம் காரணமாகச் செல்வம் பெற்றவனை, அறம் செய்யத் தூண்டுவது அக்காரத்தோடு பாலையும் சேர்த்துச் சொரிவது போன்றது (பழ. 199: 4: 1).

**கடுவன் (3)** - குரங்கு வகையில் ஆண். பன்றிகளால் உழப்பட்டுக் குறவர்களால் சுட்டுக் கரிந்துபோன புனக்கொல்லையில் ஆண் குரங்காகிய கடுவன் முதிர்ந்த வாழைக்காயைப் புதைத்து மகிழும் தாழ்ந்த அருவிகளையுடைய நாடன் என் தோழியிடம் வஞ்சினம் கூறினான் (ஐந்.எழு. 11: 2: 3). நமது காதலை அறிந்த அன்னை தினைப்புனம் செல்வதைத் தவிர்த்துவிட்டாள் என்பதால், பலாப்பழத்தைப் பெற்ற பசிய கண்களையுடைய கடுவன் தன் துணையாகிய பெண் குரங்கினை ஏடி என அழைக்கும் கற்கள் சூழ்ந்த மலை நாட்டுத் தலைவன் நம்மொடு ஊடுவானோ? (திணை.ஐம். 11: 1: 4). சூரியன் பொருந்திய பகற்பொழுதில் ஆண் குரங்குகள் கற்கள் நிறைந்த மலையில் ஏறி, ஆங்குள்ள வாழைகளின் கனிந்த பழங்களைப் பறித்து, உரித்துத் தம் கன்னங்களில் ஒதுக்கிக்கொண்டு விரைவாக ஓடுகின்ற மலைநாட்டுத் தலைவனின் இயல்பினைச் சொன்னால், அப்போதே நம் கை வளையல்கள் கழன்று விழும் (கைந். 7: 1: 3).

**தாலி (1)** - சிறுவர்கள் அணியும் பொன்னால் செய்த ஐம்படைத் தாலி என்னும் அணி. பொற் கொல்லர்கள் செல்வச் சிறார்களுக்குச் செய்யும் பொன்னாலாகிய ஐம்படைத் தாலியில் பவளத்தைப் பதித்து வைத்ததுபோல, முருக்கின் மரங்கள் எல்லாம் பொலிந்து மலர்ந்தன (திணை. நூற். 66: 3: 3).



*முருக்கின் மலர்*

# பாராட்டு



2025 செப்டம்பர் 12இல் நடைபெற்ற சிவகங்கை மாவட்டம், திருக்கயிலாய பரம்பரை குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் 45ஆவது குருமகா சந்நிதானம் திருவருள் திரு தெய்வசிகாமணி அருணா சல தேசிக பரமாசாரிய சுவாமிகள் [தவத்திரு குன்றக்குடி அடிகளார்] அவர்களின் அருளாலயத் திருக்கோயிலில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் திருவுருவச்சிலை திறப்பு விழா மற்றும் அவர்தம் நூற்றாண்டு விழாவில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் தமிழவேள் சிவாலயம் திரு ஜெ. மோகன் அவர்களின் செயற்கரிய சமயப்பணி, பழம்பெரும் நூல்களை மீட்டுருவாக்கம் செய்யும் செம்பதிப்புப் பணி, அவர் சமூகத்திற்கு ஆற்றிவரும் தமிழ்த் தொண்டு ஆகிய வற்றைப் பாராட்டித் ***தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழா விருது*** வழங்கிச் சிறப்பிக்கப்பட்டுள்ளார். அன்னாருக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகம் தனது பாராட்டையும் நல்வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

# நல்வாழ்த்து



அகவை 80இல் அடியெடுத்து வைத்துள்ள தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் உறுப்பினர்கள் திருமதி வாசுகி கண்ணப்பன், முனைவர் சாரதா நம்பி ஆரூரன், திருமதி மணிமேகலை கண்ணன் ஆகியோர் நீடு நலமாக வாழத் தமிழ் வளர்ச்சிக் கழகம் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

## திருமதி காஞ்சனாபாய் சோர்டியா (14.08.1949–03.10.2025) அஞ்சலி



தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் துணைத்தலைவரும், அறங்காவல் குழு உறுப்பினரும், புரவலருமான திரு எஸ். கிருஷ்ணசந்த் சோர்டியா அவர்களின் துணைவியார் திருமதி காஞ்சனாபாய் சோர்டியா அவர்கள் மறைவுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

திரு சோர்டியா அவர்களின் அறக்கொடைகளுக்கெல்லாம் துணை நின்றவர் அவருடைய துணைவியார் என்பதையும் நன்றியோடு தமிழ் வளர்ச்சிக் கழகம் நினைவுகூர்கிறது.

# நூல் விற்பனை (50% கழிவுடன்)

தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள அனைத்து நூல்களும் 50% சிறப்புக் கழிவுடன் விற்பனை செய்யப்படுகின்றன.

தொடர்புக்கு:

**தமிழ் வளர்ச்சிக் கழகம்**

**மணிக்கூண்டுக் கட்டடம், சென்னைப் பல்கலைக்கழக வளாகம், சேப்பாக்கம், சென்னை 600 005**

**தொலைபேசி: 044-25365440 இணைய வலைத்தளம்: www.tamilvk.org**

**மின்னஞ்சல்: tamilvalarchikazhagam2024@gmail.com**